15

# தனிப்பாடற்றிரட்டு – காளமேகப்புலவரின் இரு பாடல்கள்

**வைக்கோலுக்கும், யானைக்கும்**

01. வாரிக் களத்தடிக்கும் வந்துபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும் - சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

**உரை:-** சீர் உற்ற- புகழ்பொருந்திய, செங்கோல - சிவந்த அழகிய, மேனி - உடம்பையுடைய, திருமலைராயன்வரையில் - திருமலைராயன் மலையின்மீது; வைக்கோல் - வைக்கோலானது வாரிக்களத்தடிக்கும் - வயலில் இருந்து எடுக்கப்பட்டு நெற்களத்திலிட்டுத் துவைக்கப்படும், வந்து பின்பு கோட்டை புகும் - பிற்பாடு புரியாகத் திரிக்கப்பட்டு நெற்கோட்டையைச் சூழ்ந்திருக்கும், போரிற் சிறந்து பொலிவாகும் - பெரிய குவியலாகக் குவிக்கப்பட்டு (மலைபோல) உயர்ந்து தோன்றி விளங்கும், மால் யானை - பெரிய யானையானது, களத்து - யுத்த களத்தில், வாரியடிக்கும் - (எதிரியின்) சேனைகளை நிலத்தில் தாக்கிக் கொல்லும், வந்து பின்பு கோட்டை புகும் - யுத்தம் முடிந்தபின் அரசனுடைய கோட்டைக்குள்ளே செல்லும், போரில் - சண்டை செய்வதில், சிறந்து - மற்றப் படைகளைப் பார்க்கிலும் மேம்பட்டு, பொலிவாகும் - நன்கு விளங்கும், ஆதலால் வைக்கோல் கூட யானைக்குச் சமமாகும், எ-று.

**இலக்கணக்குறிப்பு :-** செங்கோல் என்பது செக்கோல என்று வலித்தல் விகாரம் பெற்றது

**பாம்புக்கும், எள்ளுக்கும்**

02. ஆடிக் குடத்தடையு மாடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்- ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

**உரை:-** பாம்பு - பாம்பானது, ஆடிக்குடத்தடையும் படமெடுத்து - ஆடிக் குடத்தினுள் புகும். ஆடும்போதே இரையும் - படமெடுத்து ஆடும்போதே சீத்துச் சீத்து என்று ஓசை உண்டாக்கும், மூடித்திறக்கின் - குடத்திலிட்டு மூடியபின் அதைத் திறந்து பார்த்தால், முகம் காட்டும் - தனது தலையை எடுத்துக்காட்டும், ஓடி மண்டை பற்றில் - அது ஓடித்தலையில் தீண்டுமானால், பரபரெனும் - பரபரென்ற உணர்ச்சி உண்டாகும். பிள் நாக்கும் உண்டாம் - அதற்குப் பிளவு உள்ள நாக்கும் உண்டு. எள் - எள்ளானது, ஆடிக் குடத்தடையும் - செக்கிலே ஆட்டப்பட்டுக் குடத்தில் எடுத்து அடைக்கப்படும். ஆடும்போதே இரையும் - செக்கிலே ஆட்டும் போதே இரைச்சல் ஓசையை உண்டாக்கும், மூடித் திறக்கின் முகங் காட்டும்- குடத்தில் அசையாமல் வைத்து மூடித் திறந்து பார்த்தால் பார்ப்பவர்களுடைய முகம் அதில் தெரியும். ஓடி மண்டை பற்றில் பபரெனும் - தலையில் ஊற்றித் தேய்க்கப்பட்டால் குளிர்ச்சியான உணர்ச்சி உண்டாகும். பிண்ணாக்கும் உண்டாம்- எள்ளுப் பிண்ணாக்கு எண்ணெய் ஆட்டும்போது உண்டாகும் (ஆதலால்), பாரில்- இவ்வுலகத்தில், உற்றிடும்- உவமையாற் பொருந்துகின்ற பாம்பு எள்ளுபோல்வதாகும்; எனவே யோது- என்றே சொல்லுக, எ-று



இலவச விநியோகத்திற்காக